கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

# உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு



## மானியக் கோரிக்கை

## எண். 13



# அறிவிப்புகள் 2022 - 2023


**அர. சக்கரபாணி**

உணவு மற்றும் உணவுப்பொருள்
வழங்கல் துறை அமைச்சர்

## கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

# உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

### மானியக் கோரிக்கை எண். 13

அறிவிப்புகள்

**2022 – 2023**

**அர. சக்கரபாணி**
உணவு மற்றும் உணவுப்பொருள்
வழங்கல் துறை அமைச்சர்

## 1. மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறந்த நியாயவிலைக்கடை விற்பனையாளர்கள் / எடையாளர்களைத் தேர்வு செய்து பரிசு வழங்கப்படும்.

பொதுவிநியோகத் திட்டம் சீராக செயல்படுவதில் நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். விற்பனையாளர்களின் சிறந்த பணியினை ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ் அளித்து அங்கீகரிப்பதன் மூலம் அவர்களின் செயல்திறனையும், ஈடுபாட்டினையும் மேம்படுத்தலாம். இதன்பொருட்டு, சிறப்பாகவும், பொதுமக்கள் வரவேற்கதக்க வகையிலும் பணிபுரியும் நியாய விலைக்கடை விற்பனையாளர்கள் மற்றும் எடையாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் மாநில அளவில் மூன்று நிலைகளிலும் (முதல் பரிசு, இரண்டாம் பரிசு மற்றும் மூன்றாம் பரிசு) மாவட்ட அளவில், இரண்டு நிலைகளிலும் (முதல் பரிசு மற்றும் இரண்டாம் பரிசு) பரிசுகள் வழங்கப்படும்.

**மாநில அளவில், விற்பனையாளர்களுக்கு** முதல் பரிசாக 15,000 ரூபாயும், இரண்டாம் பரிசாக 10,000 ரூபாயும், மூன்றாம் பரிசாக 5,000 ரூபாயும் வழங்கப்படும். எடையாளர்களுக்கு முதல் பரிசாக 10,000 ரூபாயும், இரண்டாம் பரிசாக 6,000 ரூபாயும், மூன்றாம் பரிசாக 4,000 ரூபாயும் வழங்கப்படும். **மாவட்ட அளவில், விற்பனையாளர்களுக்கு** முதல் பரிசாக 4,000 ரூபாயும், இரண்டாம் பரிசாக 3000 ரூபாயும், வழங்கப்படும். இதே போன்று **எடையாளர்களுக்கு** முதல் பரிசாக 3,000 ரூபாயும், இரண்டாம் பரிசாக 2000 ரூபாயும் வழங்கப்படும்.

மாநில அளவில் சான்றிதழ் மற்றும் இதர செலவினத்திற்காக 15,000 ரூபாயும், ஒரு மாவட்டத்திற்கு ரூபாய் 3,000 வீதம் வழங்கப்படும்.

மொத்த செலவினம் ரூபாய் 6,50,000/-

## 2. கொளத்தூர் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு புதிதாக கட்டடம் கட்டப்படும்.

வில்லிவாக்கம் மற்றும் பெரம்பூர் மண்டலங்களின் எல்லைகளை மறுசீரமைத்து உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் கொளத்தூர் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகம் உருவாக்கப்பட்டு, 12.01.2022 முதல் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. பணியாளர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் மேம்படுத்தப்பட்ட சூழ்நிலையினை அளிக்கும் பொருட்டு, இந்த அலுவலகத்திற்கு 2022-2023 - ஆம் நிதியாண்டில் ரூபாய் 2.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக அலுவலக கட்டடம் கட்டப்படும்.

## 3. அஞ்சல் வழியாக புதிய மின்னணு குடும்ப அட்டைகளை பயனாளிகளின் இருப்பிடத்திற்கே அனுப்பப்படும்.

தற்போது, புதிய மின்னணு குடும்ப அட்டைகளை, பயனாளிகள் வட்ட வழங்கல் அலுவலகங்கள் / உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மண்டல அலுவலகங்கள் மூலமாக பெற்று வருகின்றனர். உறுதிசெய்யப்பட்ட சேவையினை அளிக்கும் பொருட்டும், நேரடியான தொடர்பினை தவிர்க்கும் பொருட்டும் இந்திய அஞ்சல் துறையின் மூலம் பயனாளிகளின் இருப்பிடத்திற்கு பயனாளிகளின் விண்ணப்பத்தின் பேரில், புதிய மின்னணு குடும்ப அட்டைகள் அனுப்பப்படும்.

## 4. பொதுவிநியோக திட்டத்தின் மூலம் சிறுதானியங்கள் (கேழ்வரகு) வழங்கப்படும்.

கேழ்வரகு சிறந்த ஆரோக்கிய உணவாக கருதப்படுகிறது. நீலகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் வசிக்கும் பழங்குடியினர்/ மலைவாழ் மக்களின் பிரதான உணவாக கேழ்வரகு உள்ளது. இம்மாவட்டங்களில் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் இரத்தச்சோகை நோய் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் வளர் பருவத்தினர் அதிக அளவில் உள்ளனர். அரிசிக்குப் பதிலாக கேழ்வரகு வழங்கினால், அம்மாவட்ட மக்களுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவு கிடைப்பதுடன், பழங்குடியினர்/மலைவாழ் மக்களின் உணவு பழக்கவழக்கங்களும் பாதுகாக்கப்படும். எனவே, பொது விநியோக திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உரிம அளவில் ஒரு பகுதியாக ஒரு குடும்பத்திற்கு இரண்டு கிலோ கேழ்வரகு அரிசிக்குப் பதிலாக வழங்கும் திட்டம் ஒரு முன்னோடி திட்டமாக நீலகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

**5. உணவு தானியங்கள் சேமிப்பதற்காக 12 வட்ட செயல்முறை கிடங்குகள் மொத்தம் 28000 மெ.டன் கொள்ளளவில் ரூபாய் 54 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிதி உதவியுடன் கட்டப்படும்.**

சிவகங்கை, அரியலூர், வேலூர், திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, நாமக்கல், சேலம், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில், அந்தந்த மாவட்டங்களின் தேவைக்கேற்றவாறு 1000 மெ.டன் முதல் 2000 மெ.டன் கொள்ளளவில் மொத்தம் ரூபாய் 54 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிதி உதவியுடன் 12 வட்ட செயல்முறைக் கிடங்குகள் கட்டப்படும்.

**6. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான 260 கிடங்கு வளாகங்களில் புனரமைப்பு பணிகள் ரூ.90 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும்.**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் மொத்தம் 260 சொந்தக் கிடங்கு வளாகங்கள் இயங்கி வருகின்றன. புயல் மற்றும் கனமழை போன்ற இயற்கை பேரிடர் காலங்களில் கிடங்குகளின் உள் இணைப்புச் சாலைகள், மேற்கூரைகள் மற்றும் சுவர்கள் சேதமடைகின்றன. இவைகளின் மராமத்து மற்றும் புனரமைப்புப் பணிகளை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொண்டு பொது விநியோகத் திட்டப் பொருள்களின் தரம் பாதிக்கப்படாத வண்ணம் கிடங்குகளை சுகாதார அடிப்படையில் மேம்படுத்தப்பட வேண்டியது அவசியமாகிறது. எனவே, நடப்பு நிதியாண்டில் மொத்தம் ரூபாய் 90 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிதி உதவியுடன் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 7. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் முழுமையாக கணினிமயமாக்கப்படும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் ஒட்டுமொத்த செயல்பாடுகளை மேம்படுத்தும் விதமாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினை முழுமையாக கணினி மயமாக்குவதுடன், அதன் வரவு செலவு கணக்குகளை முறைப்படுத்தி ஒப்பிட்டு கண்காணிக்க ஏதுவாக ஒரு தனித்த மென்பொருள் உருவாக்கும் திட்டம் ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும்.

**8. கான்கிரீட் தரை மற்றும் மேற்கூரை அமைப்புடன் கூடிய நெல் சேமிப்புத் தளங்கள் மொத்தம் ரூபாய் 70.75 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிதி உதவியுடன் அமைக்கப்படும்.**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகளிடமிருந்து நெல்லினைக் கொள்முதல் செய்து வருகிறது. விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லினை இயற்கை பேரிடர்களிலிருந்து பாதுகாத்திட மொத்தம் 35000 மெ.டன் கொள்ளளவு கொண்ட கான்கிரீட் தரை மற்றும் மேற்கூரை அமைப்புடன் கூடிய 35 நெல் சேமிப்புத் தளங்களை திருவள்ளூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் மொத்தம் ரூபாய் 43.75 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிதி உதவியுடன் அமைக்கப்படும்.

மேலும், தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில், தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மொத்தம் 53000 மெ.டன் கொள்ளளவு கொண்ட 44 தளங்களுக்கு மேற்கூரை அமைக்கும் பணி ரூபாய் 27 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிதி உதவியுடன் அமைக்கப்படும்.

**9. திருவள்ளூர், பொள்ளாச்சி மற்றும் உத்தமபாளையம் ஆகிய இடங்களில் மறுபகிர்வு முறையில், 3 சிறப்பு சுற்றுக் காவல் படைகள் உருவாக்கப்படும்.**

எல்லையோர மாவட்டங்களான கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் 5 சிறப்பு சுற்றுக் காவல் படைகள் உள்ளன. இவற்றுடன், பொது விநியோகத் திட்டப் பொருள்களின் கடத்தலை கட்டுப்படுத்தவும், பதுக்கலை தடுக்கவும், ஆந்திரப்பிரதேசம் மற்றும் கேரளா மாநில எல்லைகளில் உள்ள திருவள்ளூர், பொள்ளாச்சி மற்றும் உத்தமபாளையம் ஆகிய இடங்களில் மறுபகிர்வு முறையில், 3 சிறப்பு சுற்றுக் காவல் படைகள் உருவாக்கப்படும். இதற்கான தொடரா செலவினம் ரூபாய் 44,74,500/-ம் மற்றும் தொடரும் செலவினம் ரூபாய் 5,20,000/-ம் (எரிபொருள் செலவினம்) அரசு நிதியிலிருந்து வழங்கப்படும்.

## 10. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறைக்கு தனித்து இயங்கும் கண்காணிப்பு கேமராக்கள் வழங்கப்படும்.

இன்றியமையாப் பொருள்கள் கடத்தல் நடைபெறுவதாக சந்தேகிக்கப்படும் வழித் தடங்களில் பொது விநியோகத் திட்ட பொருள்கள் கொண்டு செல்லும் வாகன நகர்வினை கண்காணிக்க ஏதுவாக, குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறைக்கு 50 தனித்து இயங்கும் கண்காணிப்பு கேமராக்கள் (Standalone CCTV Cameras) மற்றும் உரிய துணைக் கருவிகள் ரூபாய் 20 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

## 11. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நடைமுறைகளை கணினிமயமாக்கப்படும்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சொந்த நிதியிலிருந்து ரூபாய் 20 இலட்சம் செலவில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் பணி நடைமுறைகளை எளிதாகவும் துரிதமாகவும் செய்யும் பொருட்டு கூடுதல் மென்பொருள்களைப் பயன்படுத்தி கணினிமயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**12. இராணிப்பேட்டை மற்றும் திருமங்கலம் சேமிப்புக் கிடங்கு வளாகங்களில் காலியாக உள்ள இடத்தில் கூடுதலாக தலா 3400 மெ.டன் கொள்ளளவு கொண்ட புதிய சேமிப்பு கிட்டங்கிகள் கட்டப்படும்.**

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தில் மொத்தம் 7.60 லட்சம் மெ.டன் கொள்ளளவுக் கொண்ட 269 சொந்த சேமிப்புக் கிடங்குகள் பயன்பாட்டில் உள்ளது. இதில், இராணிப்பேட்டை மாவட்டம், இராணிப்பேட்டை சேமிப்புக் கிடங்கு வளாகத்தில் மொத்தம் 17800 மெ.டன் கொள்ளளவு கொண்ட 5 கிடங்குகள் உள்ளன. கடந்த 5 ஆண்டுகளாக கிடங்குகள் 100% கொள்ளளவுடன் முழு பயன்பாட்டில் உள்ளது. சந்தையின் தேவை மற்றும் சேமிப்புக்கான இடவசதி தேவையை கருத்தில் கொண்டு இராணிப்பேட்டை சேமிப்புக் கிடங்கு வளாகத்தில் காலியாக உள்ள இடத்தில் கூடுதலாக 3400 மெ.டன் கொள்ளளவு கொண்ட புதிய சேமிப்புக் கிடங்கு ரூபாய் 2.80 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன சொந்த நிதியில் கட்டப்படும்.

மதுரை மாவட்டம், திருமங்கலம் சேமிப்புக் கிடங்கு வளாகத்தில் மொத்தம் 12400 மெ.டன் கொள்ளளவு கொண்ட 4 கிடங்குகள் உள்ளது. கடந்த 5 ஆண்டுகளாக கிடங்குகள் 100% கொள்ளளவுடன் முழு பயன்பாட்டில் உள்ளது. சந்தையின் தேவை மற்றும் சேமிப்புக்கான இடவசதி தேவையை கருத்தில் கொண்டு திருமங்கலம் சேமிப்புக் கிடங்கு வளாகத்தில்காலியாகஉள்ள இடத்தில் கூடுதலாக 3400 மெ.டன் கொள்ளளவு கொண்ட புதிய சேமிப்புக் கிடங்கு ரூபாய் 2.80 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன சொந்த நிதியில் கட்டப்படும்.

**அர. சக்கரபாணி**

உணவு மற்றும் உணவுப்பொருள்
வழங்கல் துறை அமைச்சர்



‘ உறவுக்கு கை கொடுப்போம் !
உரிமைக்கு குரல் கொடுப்போம் !! ’

– முத்தமிழறிஞர் கலைஞர்